# எட்டாம் வகுப்பு

## இயல் 1

# தமிழ் மொழி மரபு

ஆசிரியர்

தொல்காப்பியர்

# தொல்காப்பியம்

- தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்.
- தமிழில் நமக்குக் கிடைத்துள்ள பழமையான நூல்.
- இது ஒரு இலக்கண நூல்.
- எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டது.
- ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.



நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன

மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்

– தொல்காப்பியர்




திணை
இரு வகைப்படும்
உயர்திணை
அஃறிணை
கடவுள், மனிதன்
விலங்கு, பறவை


பால்
ஐந்து வகைப்படும்
ஆண்பால்
முருகன்
பெண்பால்
கண்ணகி
பலர்பால்
வீரர்கள்
ஒன்றன்பால்
தாமரை
பலவின்பால்
அம்புகள்
உயர்திணை
அஃறிணை

- இந்த உலகமும், உலகில் உள்ள பொருட்களும் நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் என்னும் ஐம்பூதங்களாள் ஆனவை.
- இவ்வுலகப் பொருட்களை இருதிணை, ஐம்பால் பாகுபாட்டோடு நம் முன்னோர் வழங்கினர்.
- அதனையே நாமும் கடைபிடிக்க வேண்டும்.
- தமிழ் சொற்களில் இருக்கும் இம்மரபினை மாற்றினால் சொற்களின்  பொருள் மாறிவிடும்.